**செய்தி குறிப்பு எண்.69** **நாள்.15.7.2008**

## அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் கேபிள் இணைப்பு வழங்கும் சேவைகள் தொடக்க விழா

"சொன்னதைச் செய்வோம் செய்வதைச் சொல்வோம்" என்பதுதான் இவ்வரசின் தாரக மந்திரம். இந்த ஆண்டு ஜுலை 15–ம் நாள், அரசு கேபிள் டிவி நிறுவனம் தன் சேவைகளைத் தொடங்கும் என்று ஏற்கெனவே அறிவித்திருந்தேன்.

பல சவால்களை எதிர்கொள்ள நேர்ந்திருந்தாலும் சொன்னபடி சொன்ன நாளில் அப்பணிகள் இன்று தொடங்கப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

கேபிள் டிவி சேவைகள் வழங்க வேண்டுமென்றால் அதற்கு மத்திய அரசின் அனுமதி பெற வேண்டும். மத்திய அரசின் அனுமதி 2.4.2008 அன்றுதான் கிடைக்கப் பெற்றது. அனுமதி பெற்றபின், 4 மாத குறுகிய காலத்திற்குள் உலகளாவிய ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு, உலகப் புகழ் பெற்ற நிறுவனங்களைத் தேர்ந்தெடுத்து, தரம் வாய்ந்த இயந்திரங்களைக் கொள்முதல் செய்து அவைகளைப் பன்னாட்டு நிபுணர்கள் அடங்கிய குழுவைக் கொண்டு நிறுவி இன்று அதன் சேவைகள் மக்கள் பயனுக்காகத் தொடங்கப்படுகிறது. இது உண்மையில் ஒரு சாதனையாகும்.

அரசு எதற்காக இந்த நிறுவனத்தை ஏற்படுத்தி உள்ளது என்று பல தரப்பில் சர்ச்சைகள் எழுந்துள்ளன. அண்மையில் இது சம்பந்தமாக ஓர் அறிக்கை வெளியிட்டிருந்தேன். அதில், அரசு கேபிள் டிவி நிறுவனத்தைத் தொடங்குவது என்பது அதன் மூலம் அரசு வருமானத்தைப் பெருக்கிடும் நோக்கத்திற்காக அல்ல; உண்மையில், கேபிள் டிவி நடத்துகிறவர்கள் மூலம் பயனாளிகளான பொதுமக்களுக்கு நியாயமான கட்டணத்தில், தரமான சேவைகளை வழங்கிடும் நோக்கத்தோடுதான் இந்நிறுவனம் தொடங்கப் பட்டுள்ளது. இதுவரை, தொலைக்காட்சியின் சேவைகளைப் பெற பொதுமக்கள் உள்ளூர் கேபிள் ஆப்பரேட்டர்களுக்கு குறைந்தபட்சம் 150 ரூபாய்

கட்டணம் செலுத்தி வந்தனர். ஒவ்வொரு ஊருக்கும் தனித் தனி விகிதத்தில் கட்டணம் வசூலிக்கப்பட்டு வந்தது. உள்ளூர் கேபிள் ஆப்பரேட்டர்களுக்கு தொலைக்காட்சி நிறுவனத்திடமிருந்து சேனல்களைப் பெற்றுத் தருவதாகச் சொல்லி, பல MSO நிறுவனங்கள் செயல்பட்டு வந்தன. இவற்றில், சில MSO–க்கள் உள்ளூர் கேபிள் ஆப்பரேட்டர்களிடமிருந்து கணிசமான தொகையை வசூல் செய்து பெரும் லாபம் சம்பாதித்து வந்தன. இதில், ஏராளமான முரண்பாடுகளும், புகார்களும் தொடர்ந்து கூறப்பட்டு வந்த நிலையில்தான், அரசே மக்களுக்கும் கேபிள் ஆப்பரேட்டர்களுக்கும் உதவிட வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தைத் தொடங்கியுள்ளது.

இது ஒரு புதிய திட்டம். எந்த ஒரு மாநிலத்திலும் இது போன்ற ஒரு திட்டத்தைச் செயல்படுத்தியுள்ளதாகச் செய்திகள் கிடையாது. உலக அளவிலேயே இது போன்ற ஒரு திட்டம் அரசால் செயல்படுத்தப்படுகிறதா என்பதும் ஒரு கேள்விக்குறியாகவே உள்ளது.

புதிய திட்டம் ஒன்று தொடங்கப்படும்போது, அதைத் தொடங்கி ஒரு சில மாதங்கள் ஆகின்ற வரையில் நடைமுறைப் பிரச்சனைகள் ஏற்படுவது இயல்பு. அதை ஒவ்வொன்றாகக் களைந்து, இத்திட்டத்தை வெற்றி பெறச் செய்ய அரசு தொடர்ந்து முயற்சிகள் எடுத்து வருகிறது.

அண்மையில் மக்களிடமிருந்து எவ்வளவு கட்டணம் வசூலிப்பது என்ற ஒரு பிரச்சனை எழுந்தது. தற்போது அவர்கள் 150 ரூபாய்க்குக் குறையாமல் கட்டணம் செலுத்தி வருகிறார்கள் என்ற செய்தியை நான் அறிந்தேன்.

அக்கட்டணத்தைக் குறைத்து மாநிலம் எங்கும் ஒரே கட்டணமாக 100 ரூபாய்க்கு மிகாமல் இருக்கவேண்டுமென்ற முடிவை எடுத்து அது அறிவிக்கப்பட்டது.

இதுபற்றியும் சில பத்திரிகைகளில் விமர்சனம் வந்துள்ளது. மத்திய அரசு 77 ரூபாய்தான் வசூலிக்க வேண்டும் என்ற நிலை இருக்கும் போது, தமிழக அரசு 100 ரூபாய் ஏன் வசூலிக்க வேண்டும் என்பது தான் அவர்களின் புகார். மத்திய

**அரசின் "டிராய்" அறிவித்த கட்டணமான 77 ரூபாய்** "Free to Air" **என்ற இலவச சேனல்களுக்கு மட்டுமே பொருந்தும். அரசு கேபிள் டிவி நிறுவனமோ இலவச சேனல்களைத் தவிர, கட்டணச் சேனல்களும் கொடுப்பதால் 100 ரூபாய் வரை வசூலிக்கலாம் என எடுத்துள்ள முடிவு சரியானதே எனக் கருதப்படுகிறது. இவ்வேளையில் தற்போது, இதே 60 சேனல்களைக் கொடுப்பதற்கு 150 ரூபாயிலிருந்து 300 ரூபாய் வரை வசூலிக்கப்படுகிறது என்பதையும் சுட்டிக் காட்டிட விரும்புகிறேன்.**

**சென்னையில், இதே கட்டணத்தில் சேவைகளைக் கொடுப்பீர்களா என்ற அடுத்த கேள்வி எழுந்துள்ளது. சென்னையில்** Conditional Access System **என்ற முறை நடைமுறையில் உள்ளது. இங்கு இரண்டு வகை இணைப்புகள் வழங்கும் முறை உள்ளது. ஒன்று, செட் ஆப் பாக்ஸ் இல்லாமல், கேபிள் இணைப்பு மட்டுமே பெற்று குறிப்பிட்ட சில சேனல்கள் மட்டும் காண்பதாகும். இந்த முறைதான் சென்னையில் அதிக அளவில் நடைமுறையில் உள்ளது. இதுபோன்ற இணைப்புகளை கேபிள் டிவி நிறுவனம் மற்ற மாவட்டங்களில் உள்ளது போல் மாதம் ஒன்றுக்கு 100 ரூபாய்க்கு மிகாமல் வழங்கும். இரண்டாவது முறையில், செட் ஆப் பாக்ஸ் மூலமாக இணைப்புகள் பெறுவோர், தாங்கள் பார்க்க விரும்பும் சேனல்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப, மத்திய அரசின் "டிராய்" விதிமுறைகளுக்கு உட்பட்டு கட்டணம் நிர்ணயிக்கப்படும். எது எப்படி இருந்தாலும் அரசு கேபிள் டிவி நிறுவனம், தற்போது பொது மக்கள் செலுத்திவரும் கட்டணத்தைவிட அதிகக் கட்டணத்தை நிச்சயமாக வசூலிக்காது.**

**அரசு கேபிள் டிவி நிறுவனம், தற்போது இயங்கி வரும்** MSO–**க்கள் மூலம்தான் இணைப்புகளைக் கொடுக்கும் என்ற இன்னொரு பிரச்சனை எழுந்துள்ளது. இதற்கு நான் கூறும் ஒரே பதில், அரசு கேபிள் டிவி நிறுவனம் பாரபட்சமின்றி இணைப்புகளை வழங்கும். முதல் கட்டமாக, அரசு கேபிள் டிவி நிறுவனத்திடம் முன்பதிவு செய்திருக்கும் கேபிள் டிவி ஆப்பரேட்டர்களுக்கு இணைப்புகள் வழங்கப்படும். முன்பதிவு செய்யாத கேபிள் டிவி ஆப்பரேட்டர்களுக்கு, விரைவில் இன்னொரு வாய்ப்பு கொடுக்கப்படும். அரசின்**

நிபந்தனைகளுக்கு உட்பட்டு செயல்பட முன்வரும் அனைவருக்கும் அரசு கேபிள் டிவி நிறுவனம் இணைப்புகள் வழங்கும். தற்போது இயங்கி வரும் MSO நிறுவனங்களும் இவ்வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இன்னொரு முக்கியமான பிரச்சனையைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். அனைத்துக் கட்டணச் சேனல்களையும் அரசு கேபிள் டிவி நிறுவனம் அளிக்குமா என்று சில தரப்பில் கேள்விகள் கேட்கப்பட்டன. தற்போது, 300–க்கு மேற்பட்ட கட்டணச் சேனல்கள் இயங்கி வருகின்றன. அவை அனைத்தையும் அரசு கேபிள் டிவி நிறுவனம் அளிப்பது சாத்தியமாகாது. மக்களிடையே செல்வாக்குப் பெற்ற 70–லிருந்து 80 முக்கிய சேனல்களை அளிக்க அரசு கேபிள் டிவி நிறுவனம் முடிவு செய்துள்ளது. இச்சேனல்களின் பிரதிநிதிகளை அழைத்து அவர்களுடைய சேவைகளை வழங்குமாறு அரசு கேட்டுக் கொண்டது. அதற்குப் பெரும்பாலான கட்டணச் சேனல்கள், அரசு கேபிள் டிவி நிறுவனத்திற்குத் தங்கள் சேவைகளை வழங்க இசைவு தெரிவித்துள்ளன. சில கட்டணச் சேனல்கள் அரசு கேபிள் டிவி நிறுவனத்திற்குச் சேவைகள் வழங்க இதுவரை இசைவு தெரிவிக்கவில்லை. அவர்களிடமிருந்து சேவைகள் பெற சட்டப்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று இத்தருணத்தில் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இதுபோன்று தினமும் ஒரு புதிய பிரச்சனை எழுந்த வண்ணம் உள்ளது. இந்தப் பிரச்சினைகள் அனைத்தையும் எதிர்நோக்கி அவைகளைக் களைந்து மக்களுக்குத் தொடர்ந்து இந்நிறுவனத்தின்மூலம் தமிழக அரசு சேவைகளை வழங்கும் என்று தெரிவித்து என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி. வணக்கம்.

* *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.